# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

***8th ஜூன் / June 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

| | |
|---|---|
| ✝ ***ஆராதனைக்கு அழைப்பு***<br>Call to Worship | ***திருமதி. எமிலி***<br>Mrs. Emily |
| ***இறைவணக்கப்பாடல்***<br>Introit | ***பாடகர் குழு***<br>Choir |
| ***ஜெபம்***<br>Prayer | ***திருமதி. எமிலி***<br>Mrs. Emily |
| ✝ ***தொடக்க பாடல்***<br>Opening Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***சுத்த ஆவி, என்னில் தங்கும்,***

*1. சுத்த ஆவி, என்னில் தங்கும்,*
*நானும் சுத்தன் ஆகவே;*
*பாவ அழுக்கெல்லாம் நீக்கும்;*
*உம் ஆலயமாகவே*
*என்னை நீர் சிங்காரியும்,*
*வாசம்பண்ணும் நித்தமும்*

*2. சத்திய ஆவி, என்னில் தங்கும்,*
*நானும் சுத்தன் ஆகவே;*
*தெய்வ பக்தி என்னில் முற்றும்*
*வளர்ந்தேறச் செய்யுமே;*
*நீர் என்னில் பிரவேசியும்,*
*ஆண்டுகொள்ளும் நித்தமும்*

*3. நேச ஆவி, என்னில் தங்கும்,*
*நானும் நேசன் ஆகவே;*
*துர்ச் சுபாவம் போகப்பண்ணும்;*
*அன்பில் நான் வேரூன்றவே*
*அன்பின் ஜூவாலை எழுப்பும்,*
*மென்மேலும் வளர்த்திடும்*

*4. வல்ல ஆவி, என்னில் தங்கும்,*
*நானும் வல்லோன் ஆகவே;*
*சாத்தான் என்னைத்*
*தூண்டிவிடும்*
*போது ஜெயங்கொள்ளவே*
*நீர் என் பக்கத்தில் இரும்,*
*என்னைப் பலப்படுத்தும்*

| | |
|---|---|
| ✝ ***மாறி வாசித்தல் 23ம் ஞாயிறு***<br>***"சங்கீதம் 67"*** | ***சபையார் இணைந்து***<br>Congregation |

**"தேவனே எங்களுக்கு இரங்கும்"**
Psalter Reading "Psalm 67"

| | |
|---|---|
| ✝ ***தந்தை போற்றி***<br>Gloria Patri | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***துதி ஆராதனை***
Singspiration

***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்***
Thanksgiving & Pastoral Prayer

| | |
|---|---|
| ***பரமண்டல ஜெபம்***<br>Lord's Prayer | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ✝ ***காணிக்கை பாடல்***<br>Offertory Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***ஆவியை மழைபோலே யூற்றும்***

***ஆவியை மழைபோலே யூற்றும், -பல***
***சாதிகளை யேசு மந்தையிற் கூட்டும்.***

***பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்தே,***
***பரிந்து நீர் பேசியே இறங்கிடச் செய்யும்***

*1. அன்பினால் ஜீவனை விட்டீர் - ஆவி*
*அருள் மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்,*
*இன்பப் பெருக்கிலே பொங்கி மகிழ*
*ஏராளமான ஜனங்களைச் சேரும்*

*2. சிதறுண்டலைகிற ஆட்டைப் - பின்னும்*
*தேடிப் பிடித்து நீர் தூக்கிச் சுமந்து,*
*பதறாதே நான்தான் உன் நல்மேய்ப்பன் யேசு*
*பாக்கியரென்னும் நல் வாக்கையருளும்*

*3. காத்திருந்த பல பேரும் மனங்*
*கடினங்கொள்ளா முன்னே உம் பாதஞ் சேரும்*
*தோத்திரக் கீதங்கள் பாடிப் புகழ்ந்து*
*சுத்தலோகம் வரத் தூயாவி ஊற்றும்*

*4. தோத்திரக் கீதக்கள் பாடி - எங்கும்*
*சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்*
*பாத்திரராக அநேகரெழும்பப்*
*பரிசுத்த ஆவியின் அருள்மாரி ஊற்றும்*

| | |
|---|---|
| ✝ ***பூலோகத்தாரே யாவரும்***<br>Doxology | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ✝ ***திருமறைப் பாடம்***<br>***யோவான் 14 : 15 - 21***<br>Scripture Reading | ***திரு. சாமுவேல் தேவானந்தன்***<br>Mr. Samuel Devanandan |

John 14 : 15 – 21

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

**அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
✝ Offertory & Closing Song — Congregation

<u>**ஆவியை அருளுமே, சுவாமீ**</u>

**ஆவியை அருளுமே, சுவாமீ, - எனக்**
**காயுயிர் கொடுத்த வானத்தினரசே!**

*1. பாவிக்கு ஆவியின் கனியெனுஞ் சிநேகம்,*
*பரம சந்தோஷம், நீடிய சாந்தம்*
*தேவ சமாதானம் நற்குணம், தயவு.*
*திட விசுவாசம் சிறிதெனுமில்லை - ஆவி*

*2. தீபத்துக் கெண்ணெயைச் சீக்கிரம் ஊற்றும்*
*திரி யவியாமலே தீண்டியே யேற்றும்,*
*பாவ அசூசங்கள் விலக்கியே மாற்றும்,*
*பரிசுத்தவரந் தந்தென் குறைகளைத் தீரும் - ஆவி*

*3. நற்கனி தேடிவருங் காலங்க ளல்லவோ?*
*நானொரு கனியற்ற பாழ்மர மல்லவோ?*
*முற்கனி முகங்காணா வெம்பயி ரல்லவோ?*
*முழுநெஞ்சம் விளைவற்ற உவர்நில மல்லவோ?*

**அறிவிப்புகள்**
Announcements

<u>**மனப்பாட வசனம்**</u> — **சபையார் இணைந்து**
✝ <u>Memory Verse</u> — Congregation
***I கொரிந்தியர் 9 : 22 - 23***
1 Corinthians 9 : 22 - 23

***22. பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.***

***23. சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தமே இப்படிச் செய்கிறேன்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

**ஆசீர்வாதப் பாடல்**
✝ Benediction Song

✝ **சபையார் நிற்கவும் ⁄ Indicates Congregation standing**